## ரூ.906 கோடி மதிப்பில் அமைகிறது! தருமபுரி - சேலம் - எல்லையை இணைக்கும்

# தொப்பூர் கணவாய் வழியாக உயர் மட்டப் பாலப்பணி விரைவில் தொடங்கும்!

## பேரவையில் உறுப்பினர்கள் கேள்விக்கு அமைச்சர் எ.வ.வேலு பதில்!

**சென்னை. ஜூன் 23-**

**தருமபுரி - சேலம் மாவட்ட எல்லையை இணைக்கும் தொப்பூர் கணவாய் வழியாக உயர்மட்ட மேம்பாலப் பணிகள் விரைவில் தொடங்கப்படவிருக்கின்றது என்றும் இதற்காக ரூ.906 கோடி மதிப்பீட்டில் டெண்டர் கோரப்பட்டுள்ளது என்றும் உறுப்பினர் கேள்விக்கு பதிலளிக்கையில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு குறிப்பிட்டார்.**

இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு :

**எஸ்.பி. வெங்கடேஷ்வரன்:** தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், தொப்பூர் மலைப்பாதையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றி, உயர்மட்டப் பாலம் கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் எ.வ. வேலு:** தருமபுரி மற்றும் சேலம் மாவட்டம் எல்லையை இணைக்கும் தொப்பூர் கணவாய் வழியாக தேசிய நெடுஞ்சாலை எண்.44 செல்கிறது. தருமபுரி மாவட்டத்தில் 5 கிலோமீட்டரும், சேலம் மாவட்டத்தில் 1.60 கிலோமீட்டரும் என 6.60 கிலோமீட்டர் நீளமுள்ள சாலையை உயர்மட்டப் பாலமாக அமைக்கும் பணிக்காக 906 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருக்கிறது. இப்பணி விரைவிலே துவங்கப்படவிருக்கிறது. குறிப்பாக 2027 ஆம் ஆண்டுக்குள் இப்பணியினை முடிக்க வேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

**எஸ்.பி.வெங்கடேஷ்வரன்:** அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, தொப்பூர் மலைப்பாதை தினந்தோறும் விபத்துக்கள் ஏற்படும் பகுதியாகும். அங்கு சாலை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்த மத்திய அமைச்சர் நிதின் கட்காரி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அதே தேசிய நெடுஞ்சாலையில் அதிக விபத்துக்களும், உயிரிழப்புகளும் ஏற்படும் பகுதிகளான வெள்ளக்கல், பாளையம்புதூர், சேசம்பட்டி பிரிவு, தேவர் ஊத்து பள்ளம், மேலதளையான்கொட்டாய், பழைய தெருமண்டி பிரிவு சாலையில் உயர் மட்ட மேம்பாலம் அமைக்க வேண்டுமென்று மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தி கேட்டுகொண்டு, அந்தப் பணிகளையும் விரைவுபடுத்த அமைச்சர் அவர்களை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் எ.வ.வேலு:** நில எடுப்பில் காலதாமதம் ஏற்படுகிறது என்கிற ஒரே காரணத்திற்காக திராவிட மாடல் ஆட்சி அமைந்தவுடனே முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் தனியாக 5 மாவட்ட வருவாய் அலுவலர்கள் (DRO) நியமிக்கப்பட்டு நிலம் கையகப்படுத்தக்கூடிய நிலை இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல, நிலத்தை கையகப்படுத்துவதில் தருமபுரி மாவட்டத்தில் காலதாமதம் ஏற்படுமேயானால், 5 மாவட்ட வருவாய் அலுவலர்களில் ஒருவரை இந்தப் பகுதிக்கு மாற்றம் செய்து நில எடுப்பு விரைந்து எடுப்பதற்கான முயற்சி அரசின் சார்பாக எடுக்கப்படும்.

**எஸ்.பி. வெங்கடேஷ்வரன்:** அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, தருமபுரி நகரத்தில் அதிகமான மக்கள் பாதிக்கும் பகுதிகளான நான்கு வழிச் சாலைப் பகுதியில் தினந்தோறும் விபத்துக்கள் நடைபெறுகிறது. அதனால் இராமக்கள் ஏரி முதல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் வரை ஒரு உயர்மட்ட மேம்பாலம் அமைக்க வேண்டியும், அதேபோல், தருமபுரி நல்லம்பள்ளி பகுதியிலிருந்து, ராஜப்பேட்டை, குண்டலபட்டி வரை ஒரு சுற்றுச்சாலை அமைப்பதாக அமைச்சர் அவர்கள் சட்டமன்றக் கூட்டத்தில் அறிவிப்பு செய்தார்கள். அந்தப் பணியும் விரைவாக முடித்துத் தருமாறு கேட்டுக் கொண்டு, அமைச்சர் அவர்கள் எங்கள் தொகுதியிலே உள்ள பல்வேறு கிராமச் சாலைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் எ.வ. வேலு:** தருமபுரி நகருக்கு நான்கு வழிச் சாலை சந்திப்பிலே. ஒரு உயர்மட்டச் சாலை அமைக்க வேண்டுமென்று கோரிக்கையை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். அதேபோன்று தருமபுரிக்கு புறவழிச்சாலை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்றத்திலே பேசி தொகை எடுக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக புறவழிச்சாலை அமைக்க வேண்டுமென்று சொன்னால், புறவழிச்சாலை அமைக்கின்ற பணியை துறையின் சார்பில் மூன்று வகையாக எடுத்துக் கொள்கின்றோம். முதலிலே விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கிறோம், நிலம் கையகப்படுத்துகிறோம், கடைசியாக புறவழிச்சாலையை அமைக்கும் பணிகளுக்காக முதலமைச்சர் அவர்களிடம் தொகையைப் பெற்று சாலைப் பணிகளை நாங்கள் மேற்கொள்கிறோம். அந்த அடிப்படையில் தருமபுரி நகரத்திற்கு மேற்புறம் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் ஏற்கெனவே ஒரு புறவழிச்சாலை மேற்கொள்ளும் பணி சென்றுகொண்டிருக்கிறது. தற்போது தருமபுரி நகருக்கு கிழக்கில் ஒரு புறவழிச்சாலை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன்மூலமாக, முதல்கட்டமாக குண்டலபட்டிமேடு முதல் செட்டிக்கரை வரை 5.80 கிலோமீட்டர் நீளத்திற்கு புறவழிச்சாலை அமைக்க நிலத் திட்ட பிரேரணை இப்போது தயாரிக்கப்பட்டிருக்கிறது. 13.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிலம் கையகப்படுத்துகிற பணி, நிர்வாக அனுமதி பெறுவதற்காக நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம். தருமபுரியின் மையப் பகுதியில் பாலம் அமைக்கின்ற பணிக்காக கோரிக்கை வைத்திருக்கிறார்கள். பொதுவாக புறவழிச்சாலைகள் அமைந்த பின்பு, போக்குவரத்தினுடைய அடிப்படையில், நகரப்பகுதியில், போக்குவரத்துச் செறிவு என்கிற அடிப்படையில் கணக்கு எடுப்போம். அப்பொழுது புறவழிச் சாலை அமைத்ததற்குப் பின்பும் தருமபுரியின் மையப்பகுதியில் அதிகமான போக்குவரத்து இருக்குமேயானால், அன்றைய நிலையில் இவற்றையெல்லாம் கணக்கெடுத்து உயர்மட்டப் பாலம் அமைக்கின்ற பணியில் அரசு ஈடுபடும்.



**அ. சௌந்தரபாண்டியன்:** முதலமைச்சராக நம்முடைய முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகவும், பொதுப் பணித் துறையின் மூலமாகவும் பல்வேறு திட்டப் பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு. பணிகள் நடைபெற்று வருகின்றன. அதற்காக அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய லால்குடி தொகுதி, இடையாற்று மங்கலம், தண்ணீர் பந்தலுக்கும்ரீரங்கம் தொகுதி, கிளிக்கூட்டுக்கும் இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்பது நீண்டநாள் கோரிக்கையாக உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் இதுகுறித்து கடிதங்கள் வாயிலாகத் தெரிவித்துள்ளேன். அமைச்சர் அவர்கள் இந்தப் பணியினை நிறைவேற்றித் தர முன்வருவார்களா?

**அமைச்சர் எ.வ.வேலு:** உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இந்த மானியக் கோரிக்கைகளுக்கான கூட்டத் தொடர் முடிவுற்ற பிறகு. இதனை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, நிறைவேற்ற இந்த அரசு முயற்சி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஜெ. முகம்மது ஷாநவாஸ்:** நாகப்பட்டினம். அக்கரைப் பேட்டை இரயில்வே மேம்பாலப் பணி நீண்டகாலமாக நடைபெறாமல் இருந்தது. நம்முடைய அரசு அமைந்த பிறகு. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக அதை ஆய்வு செய்து, 104 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ததையடுத்து, தற்போது அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாகப்பட்டினம் இரயில் நிலையத்திற்கு அருகிலேயே கீரைக் கொல்லைத்தெரு இரயில்வே கேட் கிராஸிங் எந்நேரமும் மூடியே கிடக்கிறது. அதனால், அங்கேயிருக்கக்கூடிய 34, 35 மற்றும் 36 வார்டுகளைச் சேர்ந்த மக்கள் நகரப் பகுதிக்கு வருவதிற்கு மிகுந்த சிரமத்தை சந்திக்கிறார்கள்; பள்ளி மாணவ, மாணவிகள் மிகுந்த இன்னலுக்குள்ளாகிறார்கள். எனவே, அந்த இரயில்வே பாதையைக் கடப்பதற்கு பாலம் அமைக்கப்படுமா?

**அமைச்சர் எ.வ.வேலு:** சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியை கவனத்தில் எடுத்துக்கொண்டு, சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளர் அவர்களை அழைத்துப் பேசி, ஆய்வு செய்து, சாத்தியக்கூறுகள் இருக்குமேயானால், அதற்கு இந்த அரசு முன்னுரிமை அளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி ஆ. தமிழரசி:** என்னுடைய மானாமதுரை தொகுதி, மானாமதுரையில், இராமேஸ்வரம்வைகை ஆற்றுப் பாலத்தை இணைக்கின்ற பாலம் மற்றும் அதனுடன் இணைக்கின்ற சாலை வசதி ஆகியவற்றை அமைப்பதற்கான கருத்துருதென்னக இரயில்வேயிடம் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கான ஒப்புதல் வரக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற இந்நேரத்தில், அந்தப் பாலத்தை அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் இந்த நிதியாண்டிலேயே அறிவிப்பு செய்வார்களா?

**அமைச்சர் எ.வ.வேலு:** சட்டமன்ற உறுப்பினர் திருமதி தமிழரசி அவர்கள் இதுகுறித்து ஏற்கெனவே கடிதம் கொடுத்திருக்கின்றார்கள். துறையின் சார்பாக ஆய்வுகளை மேற்கொண்டிருக்கின்றோம். ஏனெனில், அதே வகையில் ஆற்றிலே தேசிய நெடுஞ்சாலைத் துறை சார்பாக ஏற்கெனவே ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கிறது. அதற்குப் பக்கத்திலேயே தொடர்ந்து உடனடியாக இன்னொரு பாலம் கட்ட வேண்டுமென்றால், அதற்கு தகுதி தரத்தை ஆராய்ந்து குறித்து ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். அதற்கு உரிய தகுதியிருக்குமேயானால், இந்த அரசு அந்தப் பணிக்கு முன்னுரிமை அளிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கோவி. செழியன்:** கும்பகோணம், திருவிடைமருதூர் ஆகிய இரண்டு தொகுதிகளும் இணைந்த தொகுதிகளாகும். இந்த இரண்டு தொகுதிகளிலிருந்தும் திருவாரூர் செல்ல வேண்டுமேயானால், கிருஷ்ணாபுரம், திருநரையூர், நாச்சியார்கோவில், மாத்தூர் ஆகிய ஊராட்சிகள் வழியாகத்தான் செல்ல வேண்டும். இந்த நான்கு ஊராட்சிகளிலும், மக்கள் தொகை அதிகமாகும். போக்குவரத்து நெரிசல் அதிகமாகவும் இருக்கின்றன. நாச்சியார்கோவில் குத்துவிளக்குகள் உற்பத்தியில் மிகவும் புகழ் பெற்ற ஊராகும். எனவே, பள்ளிகள், கல்லூரிகள் துவங்குகின்ற, முடிகின்ற வேளைகளிலும், அரசு அலுவலர்கள் வேலைக்கு வந்து, செல்லும் நேரங்களிலும் மிகுந்த இடர்பாடு ஏற்படுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கிருஷ்ணாபுரத்திலிருந்து மாத்தூர் வரை இணைக்கக்கூடிய புதிய புறவழிச் சாலையை அமைத்துத் தந்தால், கும்பகோணத்திலிருந்து திருவாரூர் செல்கின்ற பயணிகளுக்கு வசதியாக இருக்கும். நல்ல பல திட்டங்களை செயல்படுத்தி வருகின்ற இவ்வரசு இந்த புதிய பாதையை அமைத்துத் தருமா?

**அமைச்சர் எ.வ. வேலு:** நம்முடைய சட்டமன்ற அரசுக் கொறடா முனைவர் கோவி. செழியன் அவர்கள் தன்னுடைய கேள்வியிலேயே, நான்கு ஊராட்சிகளை உள்ளடக்கி அந்தப் பாதை போகின்றது என்று சொன்னார்கள். ஊராட்சிச் சாலைகள், ஊராட்சி ஒன்றியச் சாலைகள், கிராமச் சாலைகள் என சாலைகளிலே பல்வேறு வகைபாடுகள் இருக்கின்றன.

மாநில நெடுஞ்சாலையைப் பொறுத்தளவிற்கு மாநில நெடுஞ்சாலைத் துறை, அதேபோன்று மாவட்ட முக்கிய சாலை, மாவட்ட இதர சாலை என்ற அடிப்படையில் 3 வகைப்படுத்தப்பட்ட சாலைகள்தான் நெடுஞ்சாலைத் துறையின் நேரடி கட்டுப்பாட்டில் இருக்கிறது. எனவே அந்த 4 ஊராட்சிகளை இணைக்கிற சாலையில் ஒரு புறவழிச் சாலை அமைக்க முடியுமா என்று ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். எனவே, அந்தக் கேள்வியையே நான் மனுக்களாக எடுத்துக்கொண்டு, சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளரை அழைத்து, இங்கு புறவழிச் சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கிறதா, நெடுஞ்சாலைத் துறையின்மூலம் அமைக்க முடியுமா அல்லது ஒன்றியத்தின்மூலம் அமைக்க முடியுமா என்பதை ஆய்வு செய்து, நெடுஞ்சாலைத் துறைமூலம் தான் அமைக்க முடியும் என்று சொன்னால், இந்த ஆண்டே அதற்கான திட்ட அறிக்கை தயார் செய்வதற்கு அரசின் சார்பாக ஆணையிடப்படும்.


**கோ. தளபதி:** மதுரை உள்வட்ட சாலை என்று சொல்லப்படுகிற Ring Roadல் இராமேஸ்வரம் சந்திப்பில் வாகனங்கள் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. திருவிழா காலங்கள் மற்றும் திருமண நிகழ்ச்சிகள் நடக்கின்ற நேரங்களில் ஒரு வாகனம் செல்ல வேண்டுமென்றால், 20 நிமிடங்கள் ஆகின்றது. எனவே, அந்தச் சந்திப்பில் ஓர் உயர்மட்ட மேம்பாலம் கட்டுவதற்கு நம்முடைய அரசு முன்வருமா?

**அமைச்சர் எ.வ. வேலு:** ஏறத்தாழ 10 ஆண்டுகள் காலமாக மாமதுரை என்று சொல்லப்படுகின்ற மதுரைக்கு எந்தவொரு திட்டமும் நடைபெறாமல் இருந்த சூழ்நிலையில், இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடனேதான். அங்கே பல்வேறு பாலங்களின் பணிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் துவக்கப்பட்டு, தற்போது பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அது அப்போலோ மருத்துவமனை பாலமாக இருந்தாலும் அல்லது கோரிப்பாளையம் பாலமாக இருந்தாலும். இப்படி இரண்டு பாலங்கள் இன்றைக்கு முதலமைச்சர் அவர்களின் திருக்கரத்தால் துவக்கப்பட்டு, பாலப் பணிகள் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, அந்தப் பாலப் பணிகளெல்லாம் முடிந்த பிறகு, போக்குவரத்துச் செறிவு இருக்குமேயானால், அவர் சொல்கின்ற பாலத்தையும் அரசாங்கம் கணக்கில் எடுத்துக்கொண்டு, அதற்கும் முன்னுரிமை அளிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ. வேலு அவர்கள் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார்.

---

## சட்டப்பேரவையில் குறள்!



சட்டமன்றப் பேரவையில் நேற்று முன்தினம், பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் படித்த குறளும் அதற்கான கலைஞர் உரையும் வருமாறு:-

**குறள்:**

**"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்**
**பேரறி வாளன் திரு."**

**கலைஞர் உரை :** பொதுநல நோக்குடன் வாழ்கின்ற பேரறிவாளனின் செல்வமானது ஊர் மக்கள் அனைவருக்கும் பயன் தரும் நீர் நிறைந்த ஊருணியைப் போன்றதாகும்.

---

## விக்கிரவாண்டி தொகுதியில்

# அமைச்சர் செஞ்சி மஸ்தான் வாக்குச் சேகரிப்பு!

## வீடு, வீடாகச் சென்றார்!

விழுப்புரம், ஜூன் 23-

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதியில் அடுத்த மாதம் ஜூலை 10ஆம் தேதி இடைத் தேர்தல் நடைபெறுகிறது. இந்த இடைத் தேர்தலில் போட்டியிட வேட்புமனு தாக்கல் கடந்த 14ஆம் தேதி முதல் தொடங்கியது.

இந்நிலையில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் அன்னியூர் சிவா, உயர் கல்வித்துறை அமைச்சர் டாக்டர் க. பொன்முடி, டாக்டர் ஜெகத் ரட்சகன் எம்.பி., அமைச்சர் சி.வி.கணேசன், விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் கௌதம சிகாமணி ஆகியோர் முன்னிலையில் விக்கிரவாண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் சந்திரசேகரிடம் தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

இதையடுத்து தி.மு.க. சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து விக்கிரவாண்டி மேற்கு ஒன்றியம் முட்டத்தூர், செ.புதூர், செ. கொளத்தூர், நகர், ஆகிய ஊராட்சிகளில் விக்கிரவாண்டி தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிக்கும்பணி நடைபெற்று வருகிறது. வாக்குச் சேகரிக்கும் பணியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டு முட்டத்தூர், செ.புதூர், செ. கொளத்தூர், நகர் உள்ளிட்ட கிராமங்களில் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தனர். அப்போது அமைச்சர் செஞ்சி மஸ்தான் கூறுகையில் விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்த வெற்றி வேட்பாளர் அன்னியூர்சிவாவைபெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும்.

எதிர்த்து நிற்கின்ற மற்ற வேட்பாளர்கள் டெபாசிட் இழக்கும் வகையில் ஓட்டு வங்கி சதவீதத்தை நாம் பெற்றுத் தர வேண்டும்.

மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்த பல்வேறு திட்டங்களையும் சாதனைகளையும் தேர்தல் பணியில் நியமிக்கப்பட்டுள்ள பொறுப்பாளர்கள், நிர்வாகிகள் ஆகியோர் கிராமத்தில் உள்ள ஒவ்வொரு வீடாகச் சென்று திண்ணைப் பிரச்சாரம் மேற்கொண்டு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரிக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

இதில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சேதுநாதன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், ஒன்றியச் செயலாளர்கள், நெடுஞ்செழியன், அண்ணாதுரை, விஜயராகவன், பச்சையப்பன், நாராயண மூர்த்தி, துரை, மணிமாறன், பழனி, செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், விக்கிரவாண்டி மேற்கு ஒன்றிய அவைத் தலைவர் சீனிவாசன், ஒன்றிய பொருளாளரும் ஒன்றியக் கவுன்சிலருமான முகிலன், மாவட்டப் பிரதிநிதி விநாயகமூர்த்தி, முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்கள் கருணாநிதி, அன்பழகன், மாவட்ட மகளிர் அணி அருள்மொழி அழகுதாஸ் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வேதநாயகம், நிர்வாகிகள் ரவி, செந்தமிழ், அழகுதாஸ், செ.புதூர் ஊராட்சி மன்றத் தலைவர் அந்தோணி, நிர்வாகிகள் முருகன், இளவன், ரங்கநாதன், ஏழுமலை உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---

## கள்ளக்குறிச்சி சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களை காப்பாற்றிட

# 200க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் - பணியாளர்கள் முழு நேர மருத்துவச் சேவையாற்றி வருகிறார்கள்!

## பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை முறை குறித்து கேட்டறிந்தபின் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

*கள்ளக்குறிச்சி, ஜூன் 23-*

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (21.06.2024) கள்ளக்குறிச்சி சம்பவத்தில் பாதிக்கப்பட்டு புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனை, கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, சேலம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்தார்.

பின்னர் புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையிலிருந்து செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

கள்ளக்குறிச்சி விவகாரத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தற்போதுவரை 168 பேர், இதில் பெண்கள் 9 பேர், திருநங்கை ஒருவர். அந்தவகையில் சம்பவம் நடைபெற்ற முதல் ஒரு சில மணி நேரங்களிலேயே முதலமைச்சர் அவர்கள் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களையும், என்னையும், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் அவர்களையும், மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்களையும் கள்ளக்குறிச்சிக்கு அனுப்பி அவர்களுக்கு போதுமான மருத்துவ வசதிகள் ஏற்படுத்தி தருவதற்கு அறிவுறுத்தினார்.

அந்தவகையில் இந்த சம்பவம் நடைபெற்ற பகுதிகளில் மருத்துவமனைகளுக்கு வராமல் இருப்பவர்களை மாவட்ட சுகாதார துணை இயக்குநர் அவர்களின் தலைமையிலான குழுவினை அமைத்து வீடுகள் தோறும் சென்று கண்ணெரிச்சல், வயிற்று எரிச்சல் போன்ற பாதிப்புகளோடு இருப்பவர்களை மருத்துவமனையில் சேர்க்கும் பணி தொடங்கப்பட்டது. அந்தப்பணிகளால் 55 பேர் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்க்கப்பட்டார்கள். இதில் இதுவரை 48 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த 48 பேரில் கள்ளக்குறிச்சி மருத்துவமனையில் 25 பேரும், புதுவை ஜிப்மரில் 3 பேரும், சேலம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 16 பேரும், விழுப்புரத்தில் 4 பேர் என்று மொத்தம் 48 பேர் மரணமடைந்திருக்கிறார்கள். இதில் 3 பெண்கள், 1 திருநங்கை உட்பட 48 பேர் மரணமடைந்திருக்கிறார்கள்.

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நிதி உதவி வழங்கினார்!

முதலமைச்சர் அவர்கள் நேற்று இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களை கள்ளக்குறிச்சிக்கு அனுப்பி அவர் வாயிலாக மரணமடைந்த குடும்பத்தாருக்கு நிவாரணமாக தலா ரூ.10 இலட்சத்திற்கான காசோலையினை அவர்களுடைய இல்லங்களுக்கே சென்று வழங்கியுள்ளார்கள். திருவண்ணாமலை, திருச்சி, சேலம், விழுப்புரம் போன்ற மாவட்டங்களிலிருந்து 67 மருத்துவர்கள் கள்ளக்குறிச்சி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் 200க்கும் மேற்பட்ட மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் 24 மணிநேரமும் முழுநேரமாக மருத்துவச் சேவையாற்றி வருகிறார்கள்.

கள்ளக்குறிச்சி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையைப் பொறுத்தவரை 600 படுக்கைகளுடன் கூடிய மருத்துவமனை, இருந்தாலும் இந்த பாதிப்புகளில் இருப்பவர்களை கவனித்துக் கொள்ள 50 படுக்கைகள் கூடுதலாக பிரத்யேகமாக அமைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மெத்தனால் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு உடனடியாக பார்வை பறிபோகும், இருதயம், சிறுநீரகம், கல்லீரல் போன்ற உறுப்புகள் படிப்படியாக செயலிழக்க தொடங்கும் என்பதால் அவர்களுக்கு தேவையான சிகிச்சை முறைகளை மருத்துவர்கள் மிகச் சிறப்பாக செய்துக் கொண்டிருக்கிறார்கள்.

முறையாக மூக்கு வழியே பிராண வாயு செலுத்துதல், நரம்பு வழியே குளுக்கோஸ் செலுத்துதல், எத்தனால் ஊசி முதல் ஒரு மணி நேரத்திற்கு ஒன்றும், இரத்த நாளத்தில் உள்ள பைக்கார்போனேட் அளவினை சரி செய்ய சோடா பைகார்பேனேட் (Soda Bicarbonate) ஊசி செலுத்துதல், ஹீமோடயாலிஸிஸ் (Hemodialysis) செய்தல், பென்டோபிராசில் (Pantoprazole) ஊசி போடுதல், செயற்கை சுவாசம் அளிப்பதற்கு வெண்டிலேட்டர் சிகிச்சை அளித்தல் என பல்வேறு வகையான சிகிச்சைகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகிறது.

இதில் மது அருந்தி நீண்ட நேரம் ஆனவர்கள் அவர்களது உடலுறுப்பு ஒவ்வொன்றாக செயலிழந்து வருகிறது என்று தெரிவதற்கு முன்னால் கூட மருத்துவமனைக்கு வர தயக்கம் காட்டியதால் இறப்புகள் அதிகம் சந்திக்க நேர்ந்தது. புதுவையைப் பொறுத்த வரை 8 பேர் Stable நிலையிலும், 8 பேர் ஆபத்தான நிலையிலும் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதில் இன்று காலை நோயாளியுடன் உடனிருந்தவருக்கு பாதிப்பு தென்பட்டு அவருக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவரும்கூட இரண்டு நாட்களுக்கு முன்னால் மது அருந்தியிருக்கிறார். அவர் வெளியில் சொல்லாமல் அதற்குரிய பாதிப்பு தென்பட்டவுடன் தற்போது அனுமதிக்கப்பட்டிருக்கிறார். எனவே புதுவை ஜிப்மர் மருத்துவமனையைப் பொறுத்தவரை 9 பேர் Critical Ward லும், 8 பேர் பொது வார்டிலும் அனுமதிக்கப்பட்டு மிகச் சிறப்பாக சிகிச்சை பெற்று வருகிறார்கள். Critical Ward இல் உள்ள 9 பேரில் 4 பேர் மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கிறார்கள், அவர்களுக்கு இம்மருத்துவமனை நிர்வாகம் 100% அனைத்து சிகிச்சைகளையும் வழங்கி வருகிறார்கள். சேலத்தினைப் பொறுத்தவரை 31 பேர் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். 23 பேர் Stable என்கின்ற நிலையினும், 8 பேர் Critical என்கின்ற நிலையிலும் இருக்கிறார்கள்.

அடுத்து சேலம் மாவட்டத்திற்கு சென்று அங்கு பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்திக்க இருக்கின்றோம். முதலமைச்சர் அவர்கள் இன்று சட்டப்பேரவையில் இது சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை எல்லாம் மிகத் தெளிவாக எடுத்துக்கூறி பாதிக்கப்பட்டவர்களுக்கு எத்தகைய நிவாரணங்கள் வழங்கப்பட்டிருக்கிறது, இன்னமும் எதிர்காலத்தில் எந்த மாதிரியான நிவாரணங்கள் வழங்கப்படும் என்பதனையும் தெரிவித்து அதோடுமட்டுமல்லாமல் எதிர்காலத்தில் எத்தனால் விஷயத்தில் மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுப்பது குறித்தும் மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

அந்தவகையில் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஒவ்வொரு மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து நலம் விசாரித்து, அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து கேட்டறிவதுமான பணியில் ஈடுபட்டிருக்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் கோவிந்தராவ், புதுவை ஜிப்மர் மருத்துவமனை இயக்குநர் மரு.ராகேஷ் அகர்வால், மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.துரைராஜன், மருத்துவப் பேராசிரியர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (21.06.2024) புதுவை ஜிப்மர் மருத்துவமனையில் கள்ளக்குறிச்சி சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்தார். இந்நிகழ்வில் தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் கோவிந்தராவ், புதுவை ஜிப்மர் மருத்துவமனை இயக்குநர் மரு.ராகேஷ் அகர்வால், மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.துரைராஜன், மருத்துவப் பேராசிரியர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்.

---

## கள்ளக்குறிச்சி சம்பவத்தை அரசியலாக்க வேண்டாம்!

# முதல்வர் எடுத்துவரும் நடவடிக்கை பாராட்டுக்குரியது!

## பொன்குமார் அறிக்கை!

*சென்னை, ஜூன் 23 -*

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய மரணம் போன்ற சம்பவங்களை அரசியலாக்குவதை விடுத்து அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து செயல்படுவதே ஆரோக்கியமான அரசியலாகும். வெளிப்படையான முதல்வரின் நடவடிக்கை பாராட்டுதலுக்குரியதாகும் என விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி தலைவர் பொன்குமார் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் குடித்து மாண்டவருடைய எண்ணிக்கை நாற்பதைத் தாண்டுகிறது என்பது அதிர்ச்சி அளிக்கக்கூடியதும், வேதனை அளிக்கக் கூடியதுமாகும். இந்தக் கொடிய செயலுக்கு யார் காரணமாக இருந்தாலும் அவர்கள் கடும் தண்டனைக்கு உள்ளாக்கப்பட வேண்டியவர்கள் என்பதில் இரு வேறு கருத்துக்களுக்கு இடமில்லை. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் இந்த சம்பவத்தை மூடி மறைத்திட முயலாமல் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கும், இனிமேல் இப்படிப்பட்ட சம்பவங்கள் நிகழாமல் தடுப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை ஆழமாகவும், அழுத்தமாகவும் எடுத்து வருகிறார்.

அதனுடைய வெளிப்பாடு தான் செய்தி வெளியானவுடன் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் மாற்றப்பட்டுள்ளார். மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட காவல்துறை அலுவலர்கள் கூண்டோடு பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து ஆய்வு செய்த முதலமைச்சர் அவர்கள் இதனை விசாரிப்பதற்கு சி.பி.சி.ஐ.டி. காவல்துறையிடம் ஒப்படைத்துள்ளார். இறப்பு எண்ணிக்கை கூடுதலான நிலையில் இந்த சம்பவத்தின் ஆழத்தினை அறிந்த முதலமைச்சர் இனிமேல் இப்படிப்பட்ட சம்பவம் நடைபெறாமல் தடுப்பதற்கு ஓய்வு பெற்ற நீதியரசர் தலைமையில் ஒரு குழுவை நியமனம் செய்துள்ளார்.



அதனை தொடர்ந்து கலால் துறைக்கு சம்பந்தப்பட்ட ஏ.டி.ஜி.பி. உள்ளிட்ட அலுவலர்கள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அமைச்சர்கள், சம்பந்தப்பட்ட அலுவலர்களை சம்பவ இடத்திற்கு அனுப்பி நிலைமைகளை ஆய்வு செய்யவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறவும் ஏற்பாடு செய்துள்ளார். அதுபோல இறந்து போன குடும்பங்களுக்கு 10 லட்ச ரூபாய் வீதம் குடும்ப வாழ்வாதாரத்திற்கு நிதி உதவியை அளித்துள்ளார். இப்படி முதலமைச்சர் எடுத்து வரும் தொடர் நடவடிக்கை என்பது இந்த பிரச்சினை முழுமையாக தீர்க்கப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதற்காகத் தான்.

இந்த அரசுக்கு கெட்ட பெயர் ஏற்பட்டுவிடும் என்று இந்த பிரச்சினையை மூடி மறைக்கவோ, மழுப்பி சமாதானப்படுத்தவோ முயலாத முதலமைச்சருடைய செயல் பாராட்டுதலுக்குரியதாகும். இந்த சம்பவத்தை எதிர்க்கட்சிகள் அரசியல் ஆக்குவது நல்லதல்ல. இறந்துப்போன குடும்பங்களுக்கு நிதி உதவி அளிப்பதை கூட விமர்சிக்கக்கூடிய நிலையில் அரசியல் கட்சித் தலைவர்கள் சென்றுள்ளனர்.

கள்ளச்சாராயம் குடித்தவனுக்கு அந்த பணம் கொடுக்கவில்லை. அவன் இறந்து போனால் அவனுடைய குடும்பம் நிராயுத பாணியாக நிற்கக் கூடாது. இந்த சம்பவத்தில் தாய், தந்தை என இருவரையும் இழந்து அனாதையாக குழந்தைகள் இருக்கின்ற ஒரு நிகழ்வும் ஏற்பட்டுள்ளது. அந்த குழந்தைகள் செய்த பாவம் என்ன? அவர்களுடைய வாழ்வாதாரத்திற்கு நிதி உதவி அளிக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் ஒரு மனிதாபிமான அரசுக்கு உண்டு. அந்த அடிப்படையில் தான் முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 10 லட்ச ரூபாய் வழங்கியுள்ளார். அதனை அரசியலாக்குவது அபத்தமாகும்.

அதேபோல இந்த சம்பவத்திற்கு முதலமைச்சரை பொறுப்பேற்க செய்வதெல்லாம் அரசியல் காரணங்களுக்காக மட்டுமே சாத்தியமாகும். கள்ளச்சாராய விற்பனையும் அதன் மூலம் இறப்புகளும் ஏற்படுவது ஏதோ இப்போது மட்டும் நடைபெறுகிற ஒரு சம்பவம் அல்ல. இது தொடர்ந்து ஒவ்வொரு ஆட்சியிலும் நடைபெறக்கூடிய ஒரு மோசமான நிகழ்வு. எனவே ஏதோ இந்த ஆட்சியில் மட்டுமே கள்ளச்சாராயமும், இறப்புகளும் நடந்தது போன்று எதிர்க்கட்சிகள் விமர்சனம் செய்வது ஏற்புடையதல்ல. இப்படிப்பட்ட துயர சம்பவங்களில் அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட்டு நின்று, குற்றவாளிகளை தண்டிப்பதற்கும், எதிர்காலத்தில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நிகழாமல் இருப்பதற்கும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்திற்கு வழிவகை செய்வதற்கும் உரிய ஆலோசனைகளை அரசுக்கு வழங்குவது தான் ஆரோக்கியமான அரசியலாக அமையும்.

இவ்வாறு பொன்குமார் தெரிவித்துள்ளார்.